2007 ஏப்ரல் 4]

இதிலே இந்த மிதவைகள் அமைப்பதற்கு மிகுந்த பொருள் செலவாகும் என்று சொல்கிறார்கள். இப்போது புதிய தொழில்நுட்ப யுகத்திலே வாழ்கிற நாம், கடலில் மீன் பிடிக்கச் செல்கின்ற மீனவர்களுக்கு, Electronic Alarms—அதாவது, நம்முடைய நாட்டின் எல்லையிலிருந்து, நம்முடைய கடல் எல்லையைக் கடக்கின்றபோது, சிறிய கடிகாரம் போன்ற ஒரு கருவிமூலம், அபாய மணியை ஒலிக்கின்ற அளவிலே இப்போது நிறையக் கண்டுபிடிப்புகள் வந்திருக்கின்றன. உதாரணமாக, நாம் இப்பொழுது Cell phone வைத்திருக்கிறோம். அந்த Cell phone சில எல்லைகளைத் தாண்டினால், அதில் பேச முடிவதில்லை; 'No signal' என்று வரும். அதைப்போல, அந்தக் கடலில் நம்முடைய எல்லையைத் தாண்டுகின்றபோது, அந்த signal அதிலே கிடைக்கின்ற வகையிலே, 'நீ எல்லையைக் கடக்கிறாய்' என்கிற அந்த அறிவிப்பைக் கொடுக்கக்கூடிய புதிய தொழில்நுட்பக் கருவியை வாங்கி, நம்முடைய மீனவர்களுக்கு மானிய விலையிலே கொடுப்பதற்குத் தமிழக அரசு ஒரு தற்காலிக ஏற்பாட்டையாவது செய்ய முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னதைப்போலத்தான், நம்முடைய மீனவர்கள் பற்றிய பிரச்சினையை அவையிலே விவாதிக்கிறபோது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மீனவர்கள் தொழில் செய்யும்போது, அவர்களுடைய உயிர்களை, உடைமைகளைத் தற்காத்துக் கொள்வதற்காக எந்தளவிற்கு அதிநவீனக் கருவிகளை அரசால் வழங்க முடியுமோ, அவற்றையெல்லாம் நம்முடைய கலைஞர் அரசு வழங்கும் என்று ஏற்கெனவே அறிவித்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

பால் பவுடர் தொழிற்சாலை

***19504—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) எடப்பாடியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கான திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடித் தொகுதியில் பெரும்பாலும் வேளாண்மைத் தொழில் செய்கின்றவர்கள்தான் அதிகமாக இருந்து வருகின்றார்கள். அவர்கள் கால்நடைகளையும் வளர்த்து அங்கு பால் உற்பத்தி அதிகமாகச் செய்கின்றார்கள். தினந்தோறும் சுமார் 25,000 லிட்டர் பால் அங்கு கொள்முதல் செய்யப்படுகின்றது. அதேபோல், சங்ககிரியில் கொள்முதல் செய்யப்படுகின்ற பாலும் பரமத்திவேலூர் மற்றும் சேலம் பகுதிகளுக்குச் சென்று அந்தப் பால் பவுடர் தொழிற்சாலைக்கு அதனைக் கொண்டு செல்கின்றார்கள். ஆகவே, இந்தப் பகுதிகளுக்கெல்லாம் சேர்த்து எடப்பாடியிலே ஒரு பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தால், அங்கு வேலைவாய்ப்பும் பெருகும்; பால் உற்பத்தியும் மேலும், மேலும் பெருகும். எனவே, பால் பவுடர் தொழிற்சாலையை எடப்பாடியில் அரசு அமைக்குமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்..

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், எடப்பாடிப் பகுதியினைச் சுற்றி 24 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 10,700 லிட்டர் பாலை சேலம் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் கொள்முதல் செய்து வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட பால், லாரிகள்மூலம் சுமார் 32 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சேலம் பால் பண்ணைக்குக் கொண்டு வரப்பட்டுப் பதப்படுத்தப்பட்டு வருகிறது. சேலம் பால் பண்ணையில் நாள் ஒன்றுக்கு 10 டன் பால் பவுடர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை உள்ளதால், எடப்பாடியில் தனியாகப் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2007 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், முதலில் பள்ளிக் குழந்தைகளுக்குக் கூடுதலாக ஒரு முட்டை வழங்கினார். மீண்டும் இப்பொழுது ஒரு கூடுதல் முட்டை வழங்கியிருக்கின்றார். பால் என்பது மிகவும் சத்துணவான பொருள். பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவில் எப்படி முட்டை வழங்குகின்றார்களோ, அதேபோல் பாலும் வழங்கினால், ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பதுபோல், பால் உற்பத்தியாளர்களும் பயன்பெறுவார்கள்; பள்ளிக் குழந்தைகளும் பயன்பெறுவார்கள் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் ஆலோசனை செய்து, தக்க நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இருப்பின், அது செய்யப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன். மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

20—

விற்பனை நிலையம்

***8921—திரு. க. இராஜேந்திரன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தா. பழூர் பகுதியில் காதி விற்பனை நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,